**22-10.2010**

# இந்தியன் வங்கியின் அரையாண்டு முடிவுகள் அறிவிப்பு

**இயக்க லாபம் 33% அதிகரிப்பு**

நிகர வட்டி வருவாய் 38% அதிகரிப்பு
NIM நிகர வட்டி margin 3.76% ஆக உயர்வு
நிகர லாபம் ரூ 416 கோடி
வர்த்தகம் ரூ 167980 கோடி
மொத்த சொத்துக்கள் ரூ 112219 கோடி
இயக்க லாபம் ரூ 739 கோடி 33.42% (YOY)
நிகர லாபம் ரூ 416 கோடி 11.77% (YOY)
வர்த்தகம் ரூ 167980 கோடி 25.37% (YOY)
டெபாசிட்டுகள் ரூ 98007 கோடி 22.40% (YOY)
கடன்கள் ரூ 69973 கோடி 29.77% (YOY)
நடப்பு மற்றும் சேமிப்புக் கணக்குகள் ரூ 31604 கோடி 27.49% (YOY)

**வெளி நாட்டுக் கிளைகளையும் சேர்த்து வங்கிக்கு 1803 கிளைகள் உள்ளன. 21 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் உள்ளனர்.**

மொத்த டெபாசிட்டுகளில் 32.25% CASA டெபாசிட்டுகள் (நடப்பு மற்றும் சேமிப்புக் கணக்குகள்).
**விவசாயக்கடன்கள் ரூ 10259 கோடி**
**நிகர வட்டி வருவாய் 38% அதிகரித்தது.**
**நிகர வட்டி மார்ஜின் 3.76%**
**Capital Adequacy Ratio (Basel II)** 12.96%
**பங்கு வருவாய் (EPS) ரு 37.60 (Annualised).**

**செப்டம்பர் மாதம் 2010 உடன் முடிவடைந்த காலாண்டுக்கான சிறப்பம்சங்கள் (performance highlights):**

**லாபம்**

நடப்பு நிதியாண்டுக்கான இரண்டாவது காலாண்டில் (Q2FY11) **இயக்க லாபம்** ரூ 738.94 கோடி. இது சென்ற நிதியாண்டின் இதே காலத்தைய ரூ 553.86 கோடியை விட 33.42% YOY அதிகமாகும்.

வணிக லாபத்தைத் தவிர்த்த மொத்த (core) இயக்க லாபம் 51.22% அதிகரித்து H1FY11 காலத்தில் ரூ 680.32 கோடியை எட்டியது. Q2FY10 காலத்தில் இது ரூ 449.88 கோடியாக இருந்தது.

நடப்பு நிதியாண்டுக்கான இரண்டாவது காலாண்டில் (Q2FY11) நிகர லாபம் ரூ 415.77 கோடி. இது சென்ற ஆண்டின் இதே காலத்தைய ரூ. 371.99 கோடியை விட 11.77% YOY அதிகமாகும்.

**வர்த்தகம்**

வங்கியின் **மொத்த வர்த்தகம்** ரூ. 167980 கோடியை எட்டியது. இது செப்டம்பர் 2009 காலத்தைய ரூ 133987 கோடியை விட 25.37% YOY அதிகமாகும்.

செப்டம்பர் 2010 இறுதியில் வங்கியின் **டெபாசிட்டுகள்** ரூ 98007 கோடி. செப்டம்பர் 2009ல் இது ரூ. 80068 கோடி. YOY வளர்ச்சி 22.40%

CASA நடப்புக்கணக்குகள் மற்றும் சேமிப்புக் கணக்குகள் செப்டம்பர் 2010ல் ரூ 31604 கோடி. இது செப்டம்பர் 2009ன் ரூ 24790 கோடியை விட 27.49% அதிகமாகும்.

மொத்த டெபாசிட்டுகளில் CASA 32.25% சென்ற ஆண்டில் 30.96% ஆக இருந்தது.

30.09.2010ன் படி கடன்கள் ரூ 69973 கோடி. 30.09.2009ல் ரூ. 53919 கோடி. YOY வளர்ச்சி 29.77%.

கடன் டெபாசிட் விகிதம் (credit deposit ratio) செப்டம்பர் 2010ன் படி 71.40%. இது செப்டம்பர் 2009ல் 67.34%

**வருமானம் மற்று செலவினம்**

மொத்த வருமானம் 17.70% அதிகரித்து ரூ. 2559 கோடியை எட்டியது. வட்டி வருவாய் 20.29% YOY வளர்ர்ச்சி கண்டது.

நிகர வட்டி வருவாய் 37.75% YOY வளர்ச்சி கண்டு Q2FY11ல் ரூ 983 கோடியை எட்டியது. இது சென்ற ஆண்டு ரூ 714 கோடி.

வணிக லாபம் (trading profit) நீங்கலாகமொத்த வட்டி சாரா வருவாய் (core non-interest income) 26% YOY வளர்ச்சி கண்டு ரூ. 225 கோடியை எட்டியது.

செப்டம்பர் 2010ன் படி மொத்த செலவினம் ரூ. 1820 கோடி. செப்டம்பர் 2009ல் இது ரூ. 1621 கோடி.

## முக்கிய விகிதங்கள்

செப்டம்பர் 2010ல் மொத்த NPA மொத்த கடன் விகிதம் 1.29%. இது Q1FY11ல் 1.45%

நிகர NPA நிகர கடன் விகிதம் 0.73%. இது Q1F11ல் 0.76%.

Provision coverage Ratio 83.27% RBI வரையறை 70%.

செப்டம்பர்2010 உடன் முடிவடைந்த காலாண்டில் நிகர வட்டி மார்ஜின் (NIM) 3.76% ஆக அதிகரித்தது. இது Q1FY11ல் 3.71% ஆக இருந்தது.

செப்டம்பர் 2010 உடன் முடிவடைந்த காலாண்டில் cost to income ratio 41.67%. இது சென்ற ஆண்டில் 44.41% ஆக இருந்தது.

30.09.2010 உடன் முடிவடைந்த காலாண்டில் பங்கு வருவாய் ரூ 37.60 (annualised) ஆக அதிகரித்தது. இது சென்ற ஆண்டு இதே காலத்தில் ரூ 33.52 ஆக இருந்தது.

பங்கு ஒன்றின் புத்தக மதிப்பு செப்டம்பர் 2010ன் படி ரூ 172.91. இது செப்டம்பர் 2009ல் ரூ 143.89 ஆக இருந்தது.

Basel IIன் படி CRAR செப்டம்பர் 2010 இறுதியில் 12.96%. இது Q2FY10ல் 12.56%.

## முன்னுரிமை திட்ட கடன்கள்:

30.09.2010ன் படி முன்னுரிமை திட்ட கடன்கள் 23.79% YOY வளர்ச்சி கண்டு ரூ 24200.86 கோடியை எட்டியது. இது adjusted net bank creditல் 40.69% ஆகும்.

30.09.2010ன் படி விவசாயக் கடன் 24.85% YOY அதிகரித்து ரூ 10259.12 கோடியை எட்டியது.

சிறப்பு விவசாயக் கடன் திட்டத்தின் கீழ் (SACP) ரூ 3621.33 கோடிவிவசாயக் கடன் வழங்கியுள்ளது. ஆண்டு இலக்கான ரூ 6510 கோடியில் இது 55.63% ஆகும்.

H1FY11ல் 206076 புதிய விவசாயிகள் பயன் பெறும் வகையில் ரூ 864.84 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

332585 சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ 1683.70 கோடி வழங்கப்பட்டது. இது மொத்த விவசாயக் கடனில் 50.13% ஆகும்.

**அனைவருக்கும் வங்கிச்சேவைத்திட்டம்**

அனைவருக்கும் வங்கிச்சேவைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த இந்தியன் வங்கிக்கு ஒதுக்கப்பட்டுள்ள இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் 20 கிராமங்களில் வங்கிச்சேவை வழங்கப்பட்டுள்ளது.

13 கிராமங்களில் வங்கி வணிகத்தொடர்பாளர்கள் (Business correspondents) மூலம் வங்கிச்சேவை கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 6 கிராமங்களில் நடமாடும் வங்கி சேவை வழங்கப்பட்டு வருகிறது. ஒரு கிராமத்தில் வங்கிக் கிளை துவக்கப்பட்டுள்ளது.

ஆந்திரப் பிரதேச மாநிலம் சித்தூர் மாவட்டத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் (NREGS) கீழ் கூலி / ஊதியமும், சமூக பாதுகாப்பு பென்ஷன் தொகையும், ஸ்மார்ட் கார்டு தொழில் நுட்ப உதவியுடன் வணிகத்தொடர்பாளர்கள் மூலம் மக்களின் இருப்பிடத்திற்கே சென்று வழங்கப்படுகிறது.

NREGS ஊதியம் வழங்குவதற்காக 43441 எளிய முறை சேமிப்புக்கணக்குகள் (No frill accounts) ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சமூக பாதுகாப்பு பென்ஷன் வழங்குவதற்காக 23649 சேமிப்புக்கணக்குகள் துவக்கப்பட்டுள்ளன.

அனைவருக்கும்வங்கிச்சேவை திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள கிராமங்களிலும் நாட்டின் இதர பகுதிகளிலும் 23.93 லட்சம் எளிய முறை சேமிப்புக் கணக்குகள் துவக்கப்பட்டுள்ளன.

வங்கி அனைவருக்கும் வங்கிச்சேவை திட்டத்தை செயல்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகளை மேலும் ஆழமாக மக்களிடையே எடுத்துச் செல்வதற்காக 61 Business Facilitators நியமிக்கப்பட்டுள்ளனர்.

வீடு வரைச் செல்லும் வங்கிச் சேவை மக்களை சென்றடைய கிராமப்புறங்களில் 20 வங்கிச்சேவை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மதுரை உசிலம்பட்டியிலும், தர்மபுரி காவேரிப்பட்டினத்திலும்,சுய உதவிக்குழுக்களுக்கான பிரத்யேக மைக்ரோசாட் கிளைகள் துவக்கப்பட்டுள்ளன.

**நுண் கடன்கள்**

செப்டம்பர் 2010 உடன் முடிவடைந்த அரையாண்டில் வங்கி 39523 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ 773.55 கோடி கடனுதவி அளித்துள்ளது.

நுண் கடன்கள் நிலுவை ரூ 129.87 கோடி அதிகரித்து ரூ 2046.99 கோடியை எட்டியது.

**கல்விக் கடன்**

செப்டம்பர் 2010 உடன் முடிவடைந்த காலத்தில் மொத்தம் ரூ 2685.70 கோடி கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

இணையதளம் மூலம் online கல்விக் கடன் விண்ணப்பிக்கும் திட்டத்தின் கீழ் 917 மாணவர்களுக்கு ரூ. 26.01 கோடி in-principle sanction வழங்கப்பட்டுள்ளது.

IBA கல்விக்கடன் திட்டத்தின் கீழ் தொழில் நுட்ப மற்றும் professional படிப்புகளை மேற்கொள்ள பொருளாதாரதில் பின் தங்கிய பிரிவைச் சேர்ந்த (பெற்றோர்) குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூ.4.50 லட்சத்திற்குள் கல்விக் கடன் பெற்ற மாணவர்களுக்கு மத்திய திட்டத்தின் கீழ் வட்டி மான்யம் வழங்கும் திட்டத்தையும் இந்தியன் வங்கி செயல்படுத்தி வருகிறது.

**சிறு மற்றும் நடுத்தர வர்த்தகத் தொழிற்பிரிவுகள்**

செப்டம்பர் 2010 இறுதியில் ரீடெய்ல் வர்த்தகம் உட்பட சிறு மற்றும் நடுத்தர வர்த்தகத் தொழிற்பிரிவுக்கு ரூ 9524 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இது 33.58% அதிகமாகும்.

**ரீடெய்ல் கடன்**

30.09.2010ன் படி தனி நபர் கடன்கள் 9.44% அதிகரித்து ரூ 11294 கோடியை எட்டியது.

**தொழில் நுட்ப முனைவுகள்**

29.09.2010 அன்று மின்னணுமூலம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 31 ATMகள் மற்றும் 21 கிளைகள் என 52 வங்கிச்சேவை மையங்கள் திறக்கப்பட்டன.

மேற்கு வங்கத்திலுள்ள முர்ஷிதாபாத் மாவட்டம் ஜாங்கிபூரில் வங்கியின் முதலாவது நடமாடும் வங்கி மாண்புமிகு மத்திய நிதியமைச்சரால் துவக்கி வைக்கப்பட்டது.

இந்த நடமாடும் வங்கியில் ATM ஒன்றும் நாணயம் மாற்றிக் கொள்ளும் இயந்திரமும் உள்ளன.

31.03.2010ல் 1005 ATMகள் இருந்தன. தற்போது 1064 ATMகள் உள்ளன. வங்கி மற்ற வங்கிகளுடன் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டின்படி, வங்கியின் வாடிக்கையாளர்கள் தற்போது 63000 ATMகளில் பயன்பெறலாம்.

சுய உதவிக் குழுக்கள் இணந்து இயக்கி பணம் பெறும் வகையில் 74 பயோமெட்ரிக் ATMகள் நிறுவப்பட்டுள்ளன.

வங்கியின் ATM கார்டுதாரர்களுக்கு அவர்கள் வங்கிக் கணக்கில் ரூ 5000க்கு மேல் பண மாற்றம் நிகழ்ந்தால் உடனடியாக SMS அனுப்பப்படும். இச்சேவை முற்றிலும் இலவசமாக அளிக்கப்படுகிறது.

**Free SMS mobile alerts**

கல்வி நிறுவனங்கள் உட்பட பல்வேறு நிறுவனங்களுக்கு பல்வேறு கட்டணங்களைச் செலுத்த ஏதுவாக multi utility payment வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**வாடிக்கையாளர் சேவை**

வங்கி வாடிக்கையாளர் வசதிக்கென online குறை தீர்ப்பு வசதியை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

customerfirst.cmd@indian-bank.com என்ற மின்னஞ்சல் மூலம் ஆலோசனைகள் / குறைகளத் தெரிவிக்க வாடிக்கையாளர்கள் வங்கியின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரை நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.

**புதிய திட்டங்கள் அறிமுகம்**

நடப்பு நிதியாண்டில் மூத்த குடிமக்களுக்கு நகைக் கடன் வழங்குதல்.

வாகனம், வீடு மற்றும் retail combo கடன் வழங்குதல்.

Online மூலம் வாடிக்கையாளர் குறை தீர்த்தல்.

பங்குகளில் முதலீடு செய்வோருக்குப் பயனளிக்கும் ASBA II திட்டம் ஆகியவை அறிமுகப்படுத்தப் பட்டன.

காப்பீட்டு திட்ட வசதி மற்றும் சேவை கட்டண வசதியுடன் கூடிய Supreme Current Account அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**சமூகப் பொறுப்புணர்வு**

இரத்த தான முகாம்கள், உடல் பரிசோதனை முகாம்கள், கண் பரிசோதனை முகாம்கள் ஆகியவை நடத்தப் படுகின்றன. படுக்கை விரிப்புகள், தலையணை மற்றும் மளிகைப் பொருட்கள் சென்னையிலுள்ள முதியோர் இல்லங்களுக்கும் விளையாட்டு விடுதிகளுக்கும் வழங்கப்பட்டன. 123 பழைய கணிப்பொறிகள் கல்வி / அறக்கட்டளை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன.

ஓய்வூதியம் பெறுவோர் பயன் பெறுவதற்காக பென்ஷன் அதாலத் நடத்தப்படுகிறது.

**விளையாட்டுத்துறை**

செப்டம்பர் 2010 அரையாண்டில் இந்தியன் வங்கியின் விளையாட்டுக் குழுக்கள் பல்வேறு போட்டிகளில் (கால் பந்து, கூடைப்பந்து, ஹாக்கி, டேபிள் டென்னிஸ், கிரிக்கெட், கேரம், செஸ் மற்றும் கைப்பந்து) பங்கெடுத்து பல கோப்பைகள வென்றுள்ளன. திருமதி G. ரேவதி உலகளவில் நடந்த இரட்டையருக்கான கேரம் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றார். (இது அமெரிக்காவில் நடந்தது). திரு S. சத்யா 4 X 100 மீட்டர் காமன்வெல்த் தொடர் ஓட்டப்பந்தயத்தில் வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார். பாங்காக்கில் நடந்த ஆசிய ஜூனியர் வாலிபால் சேம்பியன்ஷிப்பில் பங்கெடுத்து திரு D சௌந்தர் வெண்கலப்பதக்கம் வென்று உலகப் போட்டிக்கு தகுதி பெற்றார்.